[1981 ஆகஸ்ட் 22

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

After cl use 3 inset the following cl use, namely :—

"4. Repeal and saving—(1) The Tamil Nadu Agricultural Produce Markets (Second Amendment) Ordinance, 1981 (Tamil Nadu Ordin nce 6 of 1981) is hereby repealed.

2 Notwithstanding such repeal any hing done or any action taken under the principal Act as amended by the said Ordinance shall be deemed to have been done or taken under the principal Act as amended by this Act."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

புதிய பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 54/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

7 அரசினர் தனித் தீர்மானம்

மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன

1981 ஆகஸ்ட் 22] [திரு. ப. குழந்தைவேலு]

சட்டத்தின் iv-வது விவர அட்டவணையில் சேர்க்கக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு வேண்டப்படுகிறது.

வரைவுத் திருத்தம்

தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920 iv-வது விவர அட்டவணையில் 43-ஆம் விதியைச் சேர்ந்த (1) துணைவிதியின் (p) இனத்திற்கு பின்னர், பின்வரும் இனம் சேர்த்துக் கொள்ளப்பெற வேண்டும். அதாவது :—

"(pp) குடும்ப நல அறுவை சிகிச்சைகள் தொடர்பாகப் பணியாளர்களுக்குப் பயணப்படி வழங்குதல்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

6 அறிவிப்புகள் — தொடர்ச்சி

(ஈ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று 22—8—1981-ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது :—

24—8—1981 திங்கட்கிழமை — அரசினர் சட்டமுன் வடிவுகள்— ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 56/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 57/1981).

3. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1981.